**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-06012021-4181

Volume: 6

Issue: 1

Month: July

Year: 2021

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 16.03.2021

Accepted: 08.05.2021

Published: 01.07.2021

Citation:
Kalaimagal, N. "Charitable Business as the Scriptures Say." *Shanlax International Journal of Tamil Research,* vol. 6, no. 1, 2021, pp. 102–106.

DOI:
https://doi.org/10.34293/tamil.v6i1.4181

*Corresponding Author:
kalainataraj2015@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Charitable Business as the Scriptures Say

**N. Kalaimagal**
*Ph.D Scholasr, Arasar College, Thiruvaiyaru*

**Abstract -** From ancient times the people of Tamil Nadu have excelled in education, arts and sciences as well as in business. It would be an exaggeration to divide domestic trade into foreign trade and spread not only Tamil Nadu goods but also pride globally. Tamil literature clearly explains the business system, however, the so-called charitable literature of the society, the charitable business of the forgotten period literature; The purpose of this article is to look at.

**Key Words:** Ethical Tamil Literature, Literary Literature, Ethics Trade.

**References**

1. Prof. Senthamilselvi Kaliyaperumal. Kalithogayil Palaikali Oru Aaivu, P.71.
2. Sami Chidambaranar. Etty Thogaiyum Tamilar Panpadum, P.123.
3. K.P. Aravanan. Puthiya Parvayil Pathinen Keezhkanakku.

# அறநூல்கள் கூறும் அற வணிகம்

*ந. கலைமகள்*
முனைவர் பட்ட ஆய்வாளர்
அரசர் கல்லூரி, திருவையாறு

***முன்னுரை***

*பண்டைய காலம் தொட்டு தமிழ்நாட்டு மக்கள் கல்வி கேள்விகளிலும் கலை, அறிவியலிலும் சிறப்புடன் திகழ்ந்தனர். அத்துடன் வணிகத்திலும் மேம்பட்டு வாழ்ந்தனர். வாணிகத்தில் உள்நாட்டு வணிகம், அயல்நாட்டு வணிகம் எனப் பிரித்து உலகளவில் தமிழ்நாட்டுப் பொருட்களை மட்டுமின்றி பெருமையினையும் பரப்பினர். தமிழ் இலக்கியங்கள் வணிக முறையினைப் பற்றித் தெளிவாக விளக்குகின்றன. அற இலக்கியங்கள் என்றழைக்கப்படும் சங்கம் மருவிய கால இலக்கியங்கள் உணர்த்தும் அற வணிகம் என்பதனைப் பற்றிக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

***முக்கியச் சொற்கள்:*** *தமிழ் இலக்கியம், அற இலக்கியம், பதினெண் கீழ்க்கணக்கு, வணிகம்.*

வணிகம் என்பது ஒரு தொழில். இன்றைய காலத்தில் பல வகையான வணிகமுறைகள் தோன்றியுள்ளன. பழங்காலத்தில் பண்டமாற்று முறை என்னும் வகையிலும் வணிகம் நடைபெற்றது. மேலும் வணிகம் என்பது பொருட்களை அளந்து பார்த்துக் கொடுப்பது. அதில் எவ்வகையான வேறுபாடும் இருக்கக் கூடாது.

### அறம்

அறம் எனப்படுவது எவ்வித பலன் எதிர்பார்ப்பின்றி செய்யப்படும் உதவியே ஆகும். விருப்பு வெறுப்பின்றி நடுவுநிலைமையுடன் நின்று வழக்குகளைச் சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் ஆராய்ந்து பார்த்துத் தீர்ப்புக் கூறும் நீதி நிர்வாக முறையையும் அறம் என்ற சொல் தொன்றுதொட்டு உணர்த்தி வருகிறது.

### அற நூல்களின் வணிகம்

வணிகம் செய்வோர் பிறர் பொருளையும் தம் பொருள்போல் காத்து வணிகம் செய்ய வேண்டும். இது வணிகத்திற்குரிய நடுவுநிலைமை அறமாகக் கொள்ளப்படுகிறது. அவ்வாறு செய்யின் தம் பொருள் இருக்கும் நிலையில் மட்டுமின்றி இன்னும் வணிகம் வளரும் என்பதை

**வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்**
**பிறவும் தமபோற் செயின். (குறள்.120)**

விளக்குகிறது. இது வணிகத்தை வளர்ச்சி நிலைக்கு கொண்டு செல்ல உதவும் உத்தி என்று கொள்ளலாம்.

### அற நூல்களின் அறம்

மக்கள் பொருளீட்ட விரும்புவதைப் போன்று புகழ் பெறுவதிலும் அதிக நாட்டம் கொண்டிருந்தனர். அதன்பொருட்டும் அறம் செய்தனர். அவ்வாறு செய்யப்படும் அறம் அறமாகாது அது வேலை செய்து கூலி பெறுவது போன்றது என்பதைப் பழமொழி. (பா. 40) உரைக்கின்றது.

உறவு, நட்பு என எவ்வறிதலுமின்றி தன்னை தஞ்சமென வந்தடைந்தவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்து உணவு கொடுத்து பாதுகாப்பவரே உண்மையான அறம் செய்பவராவார். இல்லையெனில்

அது பொய்யறமாகக் காணப்படும் என்று விளக்குகிறது. அறத்தை எடுத்தியம்பும்போது அதன் தன்மையை அறிவதற்கு அறத்தினை உண்மை அறம் பொய் அறம் என பிரித்துரைக்கின்றது பழமொழி (பா.213).

அறமானது என்றென்றும் நிலைத்து நிற்கக் கூடியது. வாழ்க்கை முறைகளின் அடிப்படையில் இல்லறம், துறவறம் என வகைப்படுத்தப்படுகிறது. இம்முறையில் எந்த முறையில் வாழ்க்கை மேற்கொளினும் அவ்வாழ்க்கைமுறைக்கேற்ப அறம் பின்பற்றப்பட வேண்டுமென்பதை இலக்கியங்கள் கூறுகின்றன.

## அற நூல்களின் அற வணிகம்

அற நூல்கள் உணர்த்தும் கருத்துக்கள் பல. அவை மக்கள் வாழ்க்கையை சிறப்புற அமைத்துக்கொள்வதற்கு ஏற்ப கூறியுள்ளன. மக்கள் தங்கள் வாழ்வினை வளமாக அமைத்துக்கொள்வதற்கு தொழில் முக்கிய பங்கு வகிக்கின்றது.அத்தொழில் முறையில் வணிகம் முக்கியமானதாக விளங்குகிறது. ஆகவேதான் மக்களுக்கு வணிக அறம் பற்றியும் இலக்கியங்கள் கூறுகின்றன. அற நூல்கள் உரைக்கும் வணிக அறத்தினை இரு வகையாகக் கொள்ளலாம். அவை:

1. தொழிலாகிய வணிகத்தில் அறத்தினைப் பின்பற்றுவது.
2. அறத்தினையே வணிகமாக்குவது.

## வணிகத்தில் அறத்தினைப் பின்பற்றுவது

வணிகமானது பொருளீட்ட வேண்டும் என்பதற்காக செய்யப்படும் ஒரு தொழில். அதில் அறம் கடைப்பிடிக்கப்படுவது ஏன்? என்னும் வினா எழுகின்றது. இன்பமாய் வாழ்வதற்குப் பொருளீட்ட வேண்டும் என்ற அவா மக்களிடம் பரவிக் காணப்பட்டது. அப்பொருளினை அதிகம் பெறுவதற்கு பிற தொழில் மேற்கொள்வதினும் வணிகத் தொழிலினால் பெற முடியுமென வணிகம் செய்தனர். வணிகத்தினால் கிடைக்கும் அதிகமான பொருள் நிலைத்து நிற்க வேண்டுமானால் அற வழியில் வணிகம் செய்ய வேண்டுமென நூல்கள் இயம்புகின்றன. பொருள் நிலையற்றது எனினும் அற வழியில் பெற்ற பொருள் நம் தேவைக்கேற்ப நிலைத்து நிற்கும் என்னும் கருத்தினையும் வெளிப்படுத்துகின்றன.

## அறத்தினையே வணிகமாக்குவது

அறம் செய்ய வேண்டும் என்பதை விடாமல் மக்களுக்கு கூறிக் கொண்டிருக்கும் இலக்கியங்கள் மக்களின் தேவையறிந்து அவர்களுக்கு ஒரு தொழில் முறையையும் கூறத் தொடங்கின. அதுவே அறத்தையே தொழிலாகக் கொண்ட அற வணிகம். மற்ற வணிகத்தினால் வரும் பொருளனைத்தும் நிலையானவையல்ல. சில தருணங்களில் நாம் இருக்கும் காலத்திலேயே அழியக் கூடியன. அறவணிகத்தில் கிடைக்கும் களிப்பானது இக்காலத்தில் மட்டுமின்றி புவியுலகில் எத்தனை பிறப்பெடுப்பினும் கிடைக்கும். இவ்வுலகில் மட்டுமின்றி மேலுலகிலும் அது நிரந்தரமானதாக இருக்கும் என்றுரைத்து மறுபிறவிக்கும் மேலுலக வாழ்விற்கும் முன்பே வணிகத்தில் முதலீடு செய்வதற்கு அறிவுறுத்துகின்றன.

“பொருள் தனக்கு உரியவர் இன்னார் தான் என்று கருதி ஒருவரிடத்திலேயே நிலைத்திராது. நல்வினையாளர்களிடமெல்லாம் மாறிமாறிச் சென்று தங்கும். இவை செல்வம் நிலையற்றது என்பதைக் காட்டுவன. முயற்சி மட்டும் செல்வத்திற்குக் காரணம் அன்று பழவினையும் செல்வத்திற்குக் காரணம் என்ற கருத்தையும் இவைகள் காட்டும்” என்று கூறுகிறார் சாமி. சிதம்பரனார்.

## நாலடியார் உணர்த்தும் வணிக அறம்

நாலடிப் பாடல்கள் நிலையற்ற செல்வத்தைக் கொண்டு நிலைபேற்றை எவ்வாறு ஈட்டுவது என்பதை வணிக நடவடிக்கை போல விளக்கியுள்ளன. ஈகை முதலிய அறச்

செயல்களில் செல்வத்தை முதலீடு செய்தால் அருள், விடுதலை முதலான ஊதியம் கிடைக்கும். பிறருக்குக் கொடுப்பதால் மேலான செல்வம் கிடைக்கிறது. நிலையில்லாதது நிலைபேற்றைத் தருகிறது. (நாலடி பா.3இ 7இ 5)

செல்வம் நிலையில்லாதது. எனவே அது இருக்கிறபோது முதலீடு செய்து (அறங்களில்) விடுதலையை ஊதியமாக ஈட்ட வேண்டும் என்பது செல்வம் நிலையாமை கற்றுத் தரும் படிப்பினை. செல்வத்தைச் செலவாணிப் புழக்கத்திலிருந்து - பரிவர்த்தனையிலிருந்து முடக்கி வைக்கக் கூடாது என்பதை நாலடி வெண்பாக்கள் வலியுறுத்துகின்றன. அடிப்படையில் இது வணிகத் தருமம் என்பது விளங்கும்.

**பழமொழி நானூற்றில் வணிக அறம்**

செந்தமிழ்ச்செல்வி கலியபெருமாள் "இம்மையிலே இன்பமடையச் செல்வமே ஏற்ற கருவி. மறுமைக்கான நல்லறங்களைச் செய்வதற்கும் செல்வமே சிறந்த துணை. ஆதலால் பொருளீட்டும் முயற்சியில் ஒவ்வோர் ஆடவனும் ஈடுபட வேண்டும். இஃது பழந்தமிழர் கொள்கை" என்கிறார். இதனால் தற்போது வாழும் வாழ்க்கைக்கு மட்டுமன்று. அடுத்த பிறவி வாழ்க்கைக்குத் தேவையான அறச்செயல்களை இன்று செய்வதற்கும் செல்வம் தேவைப்படுகிறது. ஆயினும் அவ்வாறு ஈட்டப்படும் செல்வமும் அறவழியில் சேர்க்கக்கூடியதாக அமைய வேண்டும்.

பொருள் சேர்ப்பது தவறில்லை. சேர்க்கப்படும் பொருள் தீய வழியை விடுத்து அறவழியில் ஈட்டுவதாக அமைந்திருத்தல் வேண்டும். அப்பொருளைக் கொண்டு தீச்செயலை மேற்கொள்ளக் கூடாது. நல்அறங்கள் பலவற்றைச் செய்ய வேண்டும். அவ்வாறு செய்யின் பொருளானது குன்றாமல் மேலும்மேலும் பெருகும் என்பதை பழமொழி பாடல்கள் 173, 215, 380 குறிப்பிடுகின்றன.

பழமொழி பா.159 நல்லறம் செய்பவர் பாத்திரம் அறிந்து பிச்சையிட வேண்டும். அவ்வாறு செய்வதே நன்மையைத் தரும். பொருள் செல்வமும் பெருகும். துன்பங்கள் ஏற்படின் அவையும் விலகும் என்கிறது.

உலகில் பிறந்த எல்லா மக்களும் இன்புற்று வாழ வேண்டும் என்பதே பண்டைத் தமிழ் மக்களின் கொள்கை. அறநெறியிலே பொருளீட்டி இன்பம் பெற்று வாழ வேண்டும் என்பதே அவர்கள் கருத்து. ஒவ்வொருநாளும் இயன்ற நல்ல அறங்களைச் செய்பவருக்கு இந்த உலக வாழ்க்கைக்கு மட்டுமல்ல மறு உலகத்திலும் இனிமையும் புகழும் கிடைக்கும்.

மனிதன் பொருள் சேர்ப்பது இம்மண்ணில் இன்பமான வாழ்வுதனை விரும்புவதே காரணமாக அமைகிறது. ஆனால் இங்கு மட்டுமல்ல விண்ணுலகிலும் சொர்க்கம் பெற்று இன்பமாக வாழ்வதற்கு சான்றோர் பின்பற்றும் நல்லொழுக்கங்களை அறிந்து பின்பற்றுவதனால் அமைகிறது என்பதைப் பழமொழி பா.393 உரைக்கின்றது.

**பிறருக்குத்தீங்குசெய்வதுஅறமாகாஎன்னும் கருத்தினையறிந்த ஒருவர் நெடியது காண்கலாய் நீஅளியை நெஞ்சே கொடியது கூறினாய் மன்ற-அடியுளே முற்பகல் கண்டான் பிறன்கேடு தன்கேடு பிற்பகல் கண்டுவிடும்.**

**(பழமொழி.130)**

என்று மனதிடம் பேசுவதாக அமைந்துள்ளது. மற்றவருக்குக் கொடியது செய்யக்கூறிய மனமே! அதன் விளைவு பிற்காலத்தில் எப்படித் திரும்ப வரும் என்பதைக் காணத் தவறிவிட்டாய். ஒருவர் காலையில் பிறருக்குத் தீங்கு செய்யின் மாலையில் தன்னைச் சேர்வது உறுதி என்கிறது. இதன்மூலமாக முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்ற பழமொழி தோன்றிற்று. வணிகம் என்பது ஒருவருக்கு மட்டுமே உரியதன்று, பரந்துபட்டது. எனவே

அதில் தீமை இருக்கக் கூடாது. ஒருவருக்கு தீங்கு செய்யினும் அது தனக்கே பின்பு வந்துச் சேரும். என்று உரைப்பதாகவும் கொள்ளலாம்.

### ஏலாதி கூறும் வணிக அறம்

பண்டைய காலத்தில் மக்களின் பாகுபாட்டு முறையானது அரசர், அந்தணர், வணிகர் வேளாளர் எனப் பிரிக்கப்பட்டிருப்பதனைக் கொண்டு வணிகம் பெறும் இடத்தினை அறிய முடிகிறது. அரசருக்கு நிகரான செல்வநிலையும் மதிப்பு நிலையும் வணிகம் செய்பவருக்கும் இருந்தது.

அரசனால் பாராட்டடப்படுதல், அரசனுடன் அமர்ந்து உண்ணும் நிலையினைப் பெறுதல், அரசனாகவே வாழும் நிலையை ஏற்படுத்தித் தருதல் போன்றன அறச் செயல்களால் நிகழக் கூடியவையாகும், (பா.35, 42, 44, 52, 53, 54, 57, 70, 80). விருந்து எனில் தமிழர்களிடையே தனிச்சிறப்புமிக்கது. விருந்தினருக்கும் வீட்டினருக்கும் மட்டற்ற மகிழ்ச்சியினை நல்குவது. அவ்வாறிருக்கும் விருந்தோம்பல் நிலையினை அழியாமல் காக்க வேண்டும். அப்படி செய்பவரைத் தேவர்கள் தம் விருந்தினராய் ஏற்றுக்கொள்வர் என ஏலாதி பா.7 கூறுகிறது.

அற நூல்கள் உரைக்கும் அறம் பற்றிய செய்திகளும் வணிகம் பற்றிய செய்திகளும் இக்கட்டுரையில் கூறப்பட்டுள்ளன. பலன் எதிர்பாராமல் செய்வது தான் அறம் ஆகும் வணிக நோக்கத்தில் செய்வது அறமாகாது என்பதை உணர்த்தி, பின்பு அறத்தையே வணிகப் பொருளாகவும் பிற்காலத்திற்கு முன்பே முதலீடு செய்யக் கற்றுத் தருகின்ற செய்தியும் கூறப்பட்டுள்ளன.

### பார்வை நூல்கள்

1. செந்தமிழ்ச்செல்வி கலியபெருமாள், கலித்தொகையில் பாலைக்கலி ஓர் ஆய்வு.
2. சாமி. சிதம்பரனார், எட்டுத்தொகையும் தமிழர் பண்பாடும்.
3. க.ப. அறவாணன், புதிய பார்வையில் பதினெண் கீழ்க்கணக்கு